# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மனியிலுள்ள ஹம்பர்க்கிலிருந்து
## 07.10.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அஹ்மதிய்யா ஜமாஅத்தை எதிரிகள் எதிர்ப்பதும், அஹ்மதிகளுக்கு துன்பமிழைப்பதும், ஜமாஅத்தின் வரலாற்றில் சமீபத்தில் மட்டுமல்ல; கடந்த காலத்திலும் இருந்து வந்த ஒன்றுதான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விட அதிகமாக இஸ்லாத்திற்கு தொண்டாற்றுபவர் யாரும் அக்காலத்தில் பிறக்கவே இல்லை. ஆனால் அவர்கள் செய்த வாதங்களைக் கேட்டதும், இறைவன், இன்று உம்மை விட அதிகமாக இறைவனது விருப்பத்திற்கு உரியவரை நேசிப்பவர் யாருமில்லை. நீர் தான், **வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம்** என்ற வசனத்தை மெய்ப்பிக்கின்றீர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் ஒரு முக்கியமான முஜாஹித் என்று நம்பியவர்களும், அவர்களைப் போன்ற ஒருவர் இக்காலத்தில் யாரும் இல்லை என்று கூறியவர்களெல்லாம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விட்டு கண்களைத் திருப்பியது மட்டுமின்றி அவர்களுக்கு துன்பமிழைக்கவும் செய்தனர். மேலும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை இழிவுபடுத்துவதில் முன்னணியில் இருந்த மாற்று மதத்தினருடன் சேர்ந்து அவர்களுக்கு எதிராக கொலை வழக்கு போன்ற தகாத பொய் வழக்குகளையும் தொடுத்தனர். மேலும் அவர்களுக்கு எதிராக தமது பொய் சாட்சிகளையும் பதிவு செய்தனர்.

எனவே நாம் இன்று எதிர்கொண்டு வருகின்ற இந்த எதிர்ப்பு அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஒன்றும் புதியதல்ல. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் ஒரு சிலர் மட்டுமே இருந்த காலத்திலும் அவர்கள் பல துன்பங்களைச் சந்திக்க நேர்ந்தது. பல பொய் வழக்குகள் தொடுக்கப்பட்டன. மேலும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் உலகச் செல்வங்களை விட்டு விலகி இருக்கும் தண்டனையையும் சந்தித்து வந்தனர். மனைவி மக்களை விட்டு பிரிந்திருக்கும் தண்டனையை சகித்துக் கொள்ள நேர்ந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுள் மிகவும் தூயவர்களாகிய இரு விசுவாசிகள் காபூல் நிலத்தில் ஷஹீதாக்கப்பட்டதற்கான துன்புறுத்தும் செய்திகளையும் கேட்க நேர்ந்தது. அவர்களுள் ஒரு ஷஹீத் பெரிய தலைவர் ஆவார். இவர்களுக்கே ஆயிரக்கணக்கான சீடர்கள் இருந்தனர். இவர்கள் அரசவையில் மிகப்பெரும் கண்ணியம் பெற்றவர்கள் ஆவார்கள். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வானவரின் பண்புகள் கொண்ட விசுவாசமுடைய சான்றோர்களில் ஒருவரான சீடர் ஒருவரின் ஷஹாதத்தின் துயரச் செய்தியையும் தாங்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. ஷஹீதானவர்களுள் ஒருவரது ஷஹாதத்திற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கமாக தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் என்ற நூலை எழுதினார்கள். அதில் அவர்களது தக்வா, அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம், அவர்களது பெருமை மற்றும் அசாத்தியமான ஈமானின் நிலையை எடுத்துக் கூறியதோடு ஷஹாதத்தின் சம்பவத்தையும் அவர்களது சீடர்கள் எழுதிய பல்வேறு கடிதங்களிலிருந்து எடுத்து சுருக்கமாக அந்த சம்பவத்தையும் எழுதியுள்ளார்கள். இறுதியில் அதில் இவ்வாறு எழுதுகிறார்கள்.

அப்துல் லத்தீஃபே! உம்மீது ஆயிரம் கருணை உண்டாவதாக! நீர் எனது வாழ்நாளிலேயே உண்மையின் முன்னுதாரணத்தைக் காட்டியுள்ளீர். அந்நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்:

நாம் நமது ஜமாஅத்திற்கு அறிவுரை கூறுகிறோம். அதுபோன்ற ஈமான், அதாவது ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் காட்டியது போன்ற ஈமானைப் பெறுவதற்காக துஆ செய்து கொண்டிருங்கள்.

மனிதன் கொஞ்சம் இறைவனுக்காகவும் கொஞ்சம் உலகிற்காகவும் இருக்கும் வரை வானத்தில் அவனுக்கு மூஃமின் என்று பெயராகாது. இந்த துஆவை ஒவ்வொரு அஹ்மதியும் செய்ய வேண்டும். இதன்படி உங்களது செயல்களை அமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். நபிமார்கள் மீதும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் மீதும் துன்பங்களும் துயரங்களும் இழைக்கப்பட்டன என்பதை நாம் அறிவோம். நமது தலைவர் இறைவனுக்கு விருப்பமானவர் ஆவார்கள். ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் உமக்காகவே நாம் வானங்களையும் பூமியையும் படைத்தோம் என்று கூறுகிறான். அவர்களும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களும் கூட இந்தத் துன்பங்களைச் சந்திக்க நேர்ந்தது. பெரும்பாலார் வரலாற்றைப் படிக்கின்றனர். எனவே நமக்கு நன்றாக தெரியும். செல்வம் மற்றும் சந்ததிகளை தியாகம் செய்தோடு நூற்றுக்கணக்கானோர் உயிர் தியாகமும் செய்ய நேர்ந்தது. எனவே ஜமாஅத்தின் மீது சோதனைகள் உச்சக்கட்டமாக வரும்போதெல்லாம் நபிமார்களின் வரலாறு எல்லாவற்றிற்கும் மேலாக ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது சஹாபாக்களின் காலம் உறுதியாக நிலைநிற்றலுக்கான முன்னுதாரணத்தைக் காட்ட நமக்கு கவனமூட்டுகிறது. அதோடு இந்த சோதனைகளும், பரீட்சைகளையும் கொண்ட காலகட்டம் அடுத்து வரவிருக்கும் வெற்றிக்கு வழிவகுக்கவே வருகின்றன என்ற நம்பிக்கையில் நம்மை நிலைநிற்க வைக்கின்றது. நம்மை ஈமானில் வளர வைப்பதற்காக வருகின்றன. நம்மை இறைவனுடனுள்ள தொடர்பை இன்னும் வலுவாக்கிக் கொண்டே செல்ல வைப்பதற்காக வருகின்றன. நமக்கு துஆக்களின் பக்கம் கவனமூட்டுவதற்காக வருகின்றது. சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம், உயிர், பொருள், நேரம் ஆகியவற்றை இஸ்லாத்தின் மேன்மைக்கான வழியில் தியாகம் செய்ய சற்றும் தயங்கவில்லை. ஆனால் இஸ்லாத்தின் வெற்றியும், மேன்மைகளும் அவர்கள் செய்த இந்த தியாகங்களுக்காக மட்டும் கிடைத்த பலன் கிடையாது. மாறாக, அந்த முஸ்லிம்களுக்கு இறைவனுடன் ஒரு சிறப்பான தொடர்பு இருந்தது. துஆவிற்காக அவர்கள் இறை சந்நிதானத்தில் குனிந்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இரவுப்பொழுதில் செய்த துஆக்கள் அர்ஷின் கால்களை உலுக்கின. அந்த நபி இறைவனிடம் தன்னை முழுமையாக மாய்த்துக் கொண்டார். அவர் தன்னிடம் இருந்த அனைத்தையும் இறைவனுக்காக தியாகம் செய்து விட்டார். இறைவனில் தம்மை முழுமையாக மாய்த்துக் கொண்ட அந்த நபியின் துஆக்கள் அந்த மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி இருந்தது. ஆனால் இறைவனின் அன்பிற்குரியவரின் இந்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவாக கிடைத்த இஸ்லாத்தின் வெற்றியின் காலகட்டம் வெறும் 50, 60 வருடங்கள் அல்லது முதல் சில நூற்றாண்களுக்கு மட்டும் உரியதா? நிச்சயமாக இல்லை. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களோ கியாமத் வரை காத்தமுல் அன்பியா என்ற சிறப்பைப் பெற்றவர்கள் ஆவார்கள். எனவே இந்த வெற்றியும் கியாமத் வரை அவர்களைச் சார்ந்ததேயாகும். இடையில் ஒரு இருள் கொண்ட காலகட்டம் தோன்றியதில் சந்தேகமே இல்லை. அது கடந்து விட்டது. ஆகரீன்களோடு சேர்ந்ததால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்ட பிறகு மீண்டும் அதே காலகட்டம் ஆரம்பமாக இருந்தது. இக்காலக்கட்டம் இஸ்லாத்தின் முன்னேற்றத்தின் முந்தைய மக்கள் கண்ட அதே காட்சியைப் பார்க்க வேண்டும். ஆனால் நான் ஏற்கனவே கூறினேன். முந்தைய காலகட்டத்தின் மக்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் எல்லாவற்றிற்கும் மேலாகவும் சஹாபாக்களிடமிருந்து பலன்பெற்ற மக்களும் இவர்களிடமிருந்து பலன்பெற்ற மக்களும் மிக அதிகமாக இறை இருப்பைச் சார்ந்தே இருந்தார்களே தவிர தமது முயற்சியைச் சார்ந்து இருக்கவில்லை. இதற்காக அவர்கள் துஆவிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கினார்கள். அவர்கள் தமது இரவுகளை துஆவைக் கொண்டு அலங்கரித்தனர். எனவே ஆகரீன்களின் காலத்தில் வாளால் செய்யப்படும் ஜிஹாத் முடிந்து விட்ட இக்காலத்தில் குறிப்பாக துஆவிற்கு அதிக முக்கியத்துவம் உண்டு. இக்கருத்தை ஒவ்வொரு அஹ்மதியும் தமது கண்முன் வைத்து செயல்பட வேண்டும். இக்காலகட்டம் நிச்சயமாக இல்மி ஜிஹாதின் காலகட்டமாகும். ஆதாரங்கள் மற்றும் அத்தாட்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த சாட்சிகளையும், அத்தாட்சிகளையும் கொண்டு ஜமாஅத்தை உறுதிப்படுத்தி விட்டார்கள்.

உலகின் எந்தவொரு மார்க்கமும் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் மகத்துவம் வாய்ந்த போதனைகளை எதிர்க்க முடியாது. ஆனால் இந்த அறிவு மற்றும் ஆதாரங்கள் யாவும் அல்லாஹ்வின் அருள் இருந்தால் மட்டுமே பலனளிக்கும். அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கு அவன் முன்னால் குனிவதும் துஆவிற்கான உரிமையை நிறைவேற்றுவதும் அவசியமாகும்.

இக்காலத்தில் இதர மார்க்கங்களுக்கு மத்தியில் இஸ்லாத்தின் மேன்மையை நிரூபிக்க அஹ்மதிய்யா ஜமாஅத் நெஞ்சை நிமிர்த்தி நிற்கிறது. இஸ்லாத்திற்கு ஏற்பட்டுள்ள அக மற்றும் புற எதிர்ப்புகளை சந்தித்து வருகிறது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் அழகிய முகத்தையும் அவர்களது வாழ்வின் தூய அழகிய பகுதிகளை உலகத்தின் முன் எடுத்துக் கூற முயற்சி செய்து வருகிறது. எதிரிகளின் தாக்குதல்களுக்கு பதில் கொடுப்பது மட்டுமின்றி, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மீது ஆட்சேபனை செய்பவர்களின் முகத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டுகிறது. திருக்குர்ஆனின் மீது செய்யப்படும் ஆட்சேபனைகளுக்கு பதில் கொடுக்கிறது. அது மட்டுமல்ல. இதர வேத நூல்களுக்கு மத்தியில் திருக்குர்ஆனின் மேன்மையை நிரூபித்துக் காட்டுகிறது. சில வருடங்களுக்கு முன் ஜெர்மனியில் போப் இஸ்லாத்தின் மீதும், திருக்குர்ஆனின் மீதும் ஆட்சேபனை செய்தார். ஜெர்மனியில் வைத்து தான் அவர் இந்த ஆட்சேபனைகளை செய்தார். அப்போது இதற்கான பதிலை புத்தக வடிவில் வெளியிட வேண்டுமென்று ஜெர்மனி ஜமாஅத்திற்கு நான் கூறினேன். இதற்கு ஜெர்மனி ஜமாஅத் பதிலை தயார் செய்தது. பலர் ஒன்றிணைந்து இதற்காக அல்லாஹ்வின் அருளால் மிகச் சிறந்த பதிலை தயாரித்தார்கள். இவ்வாறு விளக்கமான பதில் மட்டுமல்ல; சுருக்கமான பதிலளிக்கவும் வேறு எந்த இஸ்லாமிய பிரிவுகளுக்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. பிறகு அமெரிக்காவில் ஒரு பாதிரி இஸ்லாமிய போதனைகளுக்கு எதிராக கூச்சலிட்டு வந்தார். இது தவிர இஸ்லாமிய போதனைகளுக்கு எதிராக எழுதுபவர்களுக்கு பதில் கொடுத்தோம். அவர்களுக்கு அறைகூவல் விடுத்தோம். ஆனால் யாராலும் அதை சந்திக்க முடியவில்லை. ஹாலந்து, டென்மார்க் போன்ற நாடுகளிலும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளித்தோம். அவர்களுக்கு அவர்களின் நிலையை கண்ணாடி போன்று எடுத்துக் காட்டினோம். எனவே இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளுடன் நாம் பலப்பரீட்சை செய்து கொண்டேதான் இருக்கிறோம். அதோடு நமது முஸ்லிம்களும் நமக்கு எதிராகவே உள்ளனர். எதிர்ப்பில் அவர்கள் அனைத்து எல்லைகளையும் மீறுகின்றனர். முஸ்லிம்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டு இஸ்லாம் மற்றும் ரஸூல் (ஸல்) அவர்களின் கண்ணியம் என்ற பெயரில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மை நேசரின் மீது அநியாயமாக தாக்குதல் தொடுக்கின்றனர். அவர்களது ஜமாஅத்தின் மீது அநியாயமாகவும், மிருகத்தனமாகவும் தாக்குதல் தொடுக்கின்றனர். இதில் பாகிஸ்தானின் பெயர் தாங்கிய ஆலிம்கள் முன்னணியில் நிற்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் என்ற தமது நூலில் காபூலின் மன்னன், மவ்லவிகளுக்கு அஞ்சினான் என்று எழுதியுள்ளார்கள். மவ்லவிகள் கூறியதன் அடிப்படையில் சாஹிப் ஸாதா சாஹிபின் ஷஹாதத் நிகழ்ந்தது. மன்னனின் உள்ளத்தில் அவர்களின் மீது கண்ணியம் இருந்திருக்கலாம். அவன் அந்த நாட்டின் மன்னனாக இருந்தபோதிலும் அவனது பிடி மவ்லவிகளின் கையில் இருந்தது. அதே போன்று இன்று பாகிஸ்தானில் அரசாங்கம் மற்றும் அரசு அதிகாரிகள் இந்த அநியாயக்கார மவ்லவிகளின் கையில் பொம்மைகளாக உள்ளனர். அல்லது அரசு அதிகாரிகளில் பெரும்பாலார் மவ்லவிகள் கூறும் மனிதநேயத்திற்குப் புறம்பான கருத்துக்களை கேட்கும் கட்டாயத்தில் உள்ளனர். எவ்வாறிருப்பினும், இன்று பாகிஸ்தானில் வசிக்கும் அஹ்மதிகள் அவர்களது உயிர் மற்றும் உடைமையின் இழப்பின் காரணமாக மட்டும் துன்பப்படவில்லை; கவலைப்படவில்லை. மாறாக இது எங்களது அன்றாட வாழ்வின் ஓர் அங்கமாகி விட்டது. எங்களது உயிர்களை நாங்கள் உள்ளங்கையில் கொண்டு திரிகிறோம் என்று பலர் எனக்கு கடிதம் எழுதுகின்றனர். இவ்வாறான நிலை இப்போது சர்வசாதாரணமாகி விட்டது. இப்போது எங்களுக்கு பயம் ஏதுமில்லை. ஆனால் இந்த அக்கிரமக்காரர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி அசிங்கமான வார்த்தைகளை எழுதி பிரசுரம்

வெளியிடுகின்றனர். பெரிய சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர். இது எங்களுக்கு இன்னும் அதிக வேதனையைத் தருகிறது என்று கூறுகின்றனர். அரசாங்க கட்டிடங்களின் சுவர்களில் இதை ஒட்டுகின்றனர். அதனை தீய வார்த்தைகள் என்று கூறுவது ஒரு சாதாரண நிலையாகும். அந்த வார்த்தைகள் மிகவும் கீழ்த்தரமான அசிங்கமான வார்த்தைகளாகவும் என்றே கூற வேண்டும். அதை ஒரு நல்ல இயல்புடைய மனிதரால் படிக்கவோ கேட்கவோ முடியாது. இந்த வார்த்தைகளைப் பற்றி எழுதுகின்ற அஹ்மதிகள் கூறுகின்றனர். இவை எங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை விட அதிகமாக எங்கள் உள்ளங்களை காயப்படுத்துகின்றது என்று எழுதுகின்றார்கள். இந்த தீய, அசிங்கமான வார்த்தைகளை ஒலிபெருக்கியில் கேட்டும், பிரசுரங்களில் படித்தும் எங்களது உள்ளம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது. அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளிடம் இதைப் பற்றி புகார் கொடுத்தால் அதை இந்தக் காதில் வாங்கி அந்தக் காது வழியாக பறக்க விட்டு விடுகின்றனர். அல்லது எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நிர்பந்தங்கள் உள்ளன என்று கூறுகின்றார்கள்.

எனவே பொறுமை மற்றும் தன்னம்பிக்கையின் மாபெரும் சரித்திரத்தை பாகிஸ்தானிய அஹ்மதிகள் எழுதி வருகின்றனர். எனவே நீங்கள் காட்டும் பொறுமையின் உணர்வை பலன் தரக்கூடியதாக ஆக்குவதற்கு ஒரேயொரு வழிதான் உள்ளது. இறைவனின் முன்னால் சிரம் பணியுங்கள். துஆக்களின் மூலம் உங்களது சஜ்தா செய்யும் இடங்களை நனைத்து வாருங்கள். அல்லாஹ்வின் அர்ஷின் கால்களை உலுக்குவதற்காக சஹாபாக்கள் ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அவர்களின் வெற்றியின் வாசலை திறந்து வைத்த அந்த நிலையை நீங்களும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். துஆக்கள் தான் நம்மை இவர்களிடமிருந்து காக்க முடியும். எதிரிகள் இஸ்லாத்தின் பெயராலும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயராலும் அஹ்மதிய்யத்தை எதிர்ப்பதில் எவ்வளவு வேகமாக முன்னேற்றம் காண்கின்றனரோ அதே அளவு வேகமாக நாம் துஆவின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். இன்னும் இதை விட அதிகமாக நாம் துஆ செய்ய வேண்டும். இதனால் நாம் அல்லாஹ்வின் அருளை மிகவும் விரைந்து ஈர்ப்பவர்களாகி விடுவோம்.

பாகிஸ்தானில் வசிக்கும் அஹ்மதிகளுக்கு நான் குறிப்பாக கவனமூட்ட விரும்புகின்றேன். துஆக்கள் என்றால் சாதாரண துஆக்கள் அல்ல. மாறாக, சிறப்பான முறையில் முன்பை விட அதிகமாக துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இந்த துஆக்களைச் செய்வதோடு வாரம் ஒரு முறை நஃபிலான நோன்பை நோற்கவும் ஆரம்பியுங்கள். அதே போன்று உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் பாகிஸ்தானின் அஹ்மதிகள் தமது பாகிஸ்தானிய சகோதரர்களுக்காக மிக அதிகமாக துஆ செய்யுங்கள். அதே போன்று பாகிஸ்தான் அல்லாத பிற நாடுகளில் வசிப்பவர்கள் தமது பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்காக மிகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் கொடுமை இழைக்கும் இம்மக்களின் வரிசையை விரைவாக சுருட்டுவானாக. இதனால் நாட்டில் விரைவாக நிம்மதியும், அமைதியும் நிலவட்டுமாக. இறைவனால் அனுப்பப்பட்ட நல்லடியாரின் மீது பொய்யும் அவதூறும் புனையப்படுகிறது. இது முடிவுக்கு வரட்டுமாக. இதனால் நாடு பாதுகாப்பாக இருக்கட்டுமாக. இல்லையெனில் நாடு பாதுகாக்கப்படும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. நிச்சயமாக உலகின் மற்ற நாடுகளில் வசிக்கும் அஹ்மதிகள் பாகிஸ்தானைச் சேர்ந்த அஹ்மதிகளுக்காக துஆ செய்ய வேண்டும். இது அவர்களின் உரிமையாகும். ஏனெனில் இவர்கள்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியை உங்களுக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

உருக்கத்துடனும் செய்யப்படுகின்ற துஆக்களை அல்லாஹ் நிச்சயமாக ஏற்றுக் கொள்கின்றான். இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக அநியாயமும் அக்கிரமும் எல்லை மீறப்படுகிறது. இதைவிட அதிகமாக நம்மிடம் உருக்கத்தை ஏற்படுத்தும் சம்பவம் வேறு எதுவாக இருக்க முடியும்? எனவே இன்று ஒவ்வொரு அஹ்மதியும் நிம்மதியிழந்தவராக துஆ செய்வது அவசியமாகும். ஏனெனில் நிம்மதியிழந்தவரின் துஆக்களை இறைவன் ஒருபோதும் நிராகரிப்பதில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவன் தனது ஓர் அடையாளமாக திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான். நிம்மதியிழந்தவரின் துஆவை ஏற்றுக் கொள்பவன் உமது இறைவன் ஆவான்.

இறைவன் தேவைகளற்றவன் ஆவான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதிகமாகவும், மீண்டும் மீண்டும் உருக்கத்துடனும் துஆ செய்யாதவரை அவன் யாரையும் பொருட்படுத்துவதில்லை. பாருங்கள்! ஒருவரது மனைவி அல்லது குழந்தை உடல்நலமின்றி காணப்பட்டால் அல்லது ஒருவருக்கு மிகவும் கடினமான வழக்கு வந்து விட்டால் இதற்காக அவர் எப்படி நிம்மதியிழந்தவராக ஆகி விடுகிறார்? துஆவில் உண்மையான வேதனையும் நிம்மதியின்மையும் உருவாகாத வரை துஆ விளைவுகள் அற்றதாகவும், வீணானதாகவும் ஆகி விடுகிறது. எனவே துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உருக்கமும், நிம்மதியின்மையும் நிபந்தனையாகும்.

எனவே இன்று ஒவ்வொரு அஹ்மதியும் குறிப்பாக இந்த துஆவை உருக்கத்துடன் செய்து வர வேண்டும். பாகிஸ்தானின் அஹ்மதிகள் குறிப்பாக இன்னும் அதிகமாக துஆ செய்ய வேண்டும். பாகிஸ்தானின் நிலையைக் கருத்தில் கொண்டு அஹ்மதிகள் கொடுமையிலிருந்து விடுதலை பெறுவதற்காக மிகவும் அதிகமாகவும், உருக்கத்துடனும் துஆ செய்ய வேண்டும். நான் ஏற்கனவே கூறினேன். அந்த உருக்கத்தை பாகிஸ்தானிய அஹ்மதிகள் சில இடங்களில் வெளிப்படுத்துகின்றனர். எல்லாரும் இல்லா விட்டாலும் சில அஹ்மதிகள் வெளிப்படுத்துகின்றனர். இன்னும் அதிகமாக இதை வெளிப்படுத்த வேண்டும். இன்னும் அதிகமாக இதை வெளிப்படுத்துங்கள். ஒவ்வொரு அஹ்மதியும் அநீதியிலிருந்து விடுதலை பெற துஆ செய்ய வேண்டும். இதுவே நமது ஆயுதமாகும். இதன் பக்கமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள்.

நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் காலத்தில் ஒருமுறை எனக்கு ஞாபகமிருக்கிறது. நான் அப்போது ரப்வாவில் இருந்தேன். என்னை அவர்கள் நாஸிர் ஆலாவாக நியமித்தார்கள். பாகிஸ்தானின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அப்போது துஆ செய்தேன். ஆனால் அந்த சமயத்தில் இருந்த நிலவரத்தை இன்றைய நிலையுடன் ஒப்பிடும்போது அது ஒன்றுமே இல்லை. அப்போது கனவில் எனக்கு ஒரு ஓசை வந்தது. 100% பாகிஸ்தானின் அஹ்மதிகள் தூய்மையான மனதோடு அல்லாஹ்வின் முன் குனிந்தால் இந்த நிலையை ஒரு சில இரவுகளின் துஆவின் மூலமாக முடிவுக்கு கொண்டு வந்து விடலாம். நான் முதல் நாளிலிருந்தே ஜமாஅத்திற்கு கவனமூட்டி வருகிறேன். என்னையும் அறியாமல் நான் கூற வரும் கருத்து துஆவின் பக்கம் திரும்பி விடுகிறது. இன்ஷா அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இறைவன் செய்துள்ள வெற்றியின் வாக்குறுதி நிறைவேறியே தீரும். இன்ஷா அல்லாஹ் இது உறுதியான ஒன்றாகும். இது முழுமை அடையும் என்பதில்லை. மாறாக முழுமையடைந்து கொண்டிருக்கிறது. பாகிஸ்தானில் ஜமாஅத் இன்னும் அதிகமாக துஆவின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். இறைவனின் வாக்குறுதி முழுமை அடைவதற்கான காட்சியை நாம் பாகிஸ்தானிலும் பார்த்து வருகிறோம். சூழ்நிலை மோசமாக இருந்த போதிலும் அல்லாஹ்வின் அருளால் அங்கு ஜமாஅத் முன்னேற்றத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. எதிரியின் ஒவ்வொரு சூழ்ச்சியும் என்ன எண்ணத்தோடும் எவ்வளவு பயங்கரமாகவும் செய்யப்படுகிறதோ இறைவன் இந்த எதிரிகளுக்கு அதற்குரிய பலனை அடைய விடுவதில்லை. எதிரிகள் மிகவும் அபாயகரமான திட்டங்களைத் தீட்டுகின்றனர். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். இறைவன் தனது அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தை முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு செல்கிறான். ஆனால் இந்த சோதனைகள் நம்மை மிகவும் வேகமாக இதன் பக்கம் ஈர்ப்பதாக அமைய வேண்டும். அதாவது நாம் முன்பை விட அதிகமாக தூய நிலையில் இருந்தவாறு இறைவனிடம் உதவியை வேண்ட வேண்டும். நமது ஒவ்வொரு குழந்தையும், இளைஞனும், முதியவரும், ஆணும், பெண்ணும் மன இச்சைகளையும் உணர்வுகளையும் தூர

எறிந்து விட்டு இறைவனின் கட்டளைக்கு முன்னால் முழுமையான முறையில் தலைகுனிந்தவாறு இறைவனுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகளையும் அவனது அடியார்களுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகளையும் செலுத்துவதற்கு முழுமையான முறையில் முயற்சி செய்தவாறு அல்லாஹ்வின் முன்னிலையில் குனிய வேண்டும். அப்போது இந்த கொடுமையிழைப்பவர்களும், இந்த அநீதியும் நமது கண்களுக்கு முன்னால் இன்ஷா அல்லாஹ் அழிந்து போகும்.

அல்லாஹ்வின் நியதி இன்ஷா அல்லாஹ் வெற்றியடைந்தே தீரும். ஆனால் இந்த நியதி வெற்றி அடைவது சில நேரம் மனிதனின் செயல்கள் மற்றும் துஆவையும் சார்ந்ததாக இருக்கிறது. சில நேரம் ஒரு தலைமுறையே இதற்காக காத்திருக்க வேண்டியதாகி விடுகிறது. நான் இந்தப் பணியை கண்டிப்பாக செய்தே தீறுவேன் என்று இறைவன் தீர்மானித்து விட்டால் அது நடந்தே தீரும். ஆனால் உங்களுக்கு அவசரம் என்றால் நான் ஏற்கனவே தீர்மானித்தது சீக்கிரம் நிகழ வேண்டுமென்றால் ஒரு புரட்சியை ஏற்படுத்துங்கள். உங்கள் இயல்புகளில் ஒரு புரட்சியை ஏற்படுத்துங்கள். நாம் இறைவனின் தூதுச் செய்தியைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே வாருங்கள் இன்று உங்கள் துஆவின் மூலம் அல்லாஹ்வின் அர்ஷின் கால்களை உலுக்குங்கள். உலுக்க முயற்சி செய்யுங்கள். நம்மில் ஒவ்வொருவரும் தூய்மையான முறையில் அல்லாஹ்வின் முன்னிலையில் குனிய வேண்டும். இறைவனின் கருணை நிச்சயமாக நமக்காக பொங்கியுள்ளது. இது இன்னும் முன்பை விட அதிகமாக பொங்கும். இது நம்மை இந்த அக்கிரமக்காரர்களை விட்டு விடுவிக்கும். 100% மக்களிடம் புரட்சி ஏற்படவில்லை என்றாலும் பெரும்பாலாரிடம் இந்த மாற்றமும், புரட்சியும் ஏற்பட்டு விட்டால் இன்ஷா அல்லாஹ் நாம் முன்பை விட அதிகமாக வெற்றியின் காட்சிகளைக் காண்போம். நாம் அனைவரும் துஆவின் அடிப்படையைப் புரிந்து கொள்பவர்களாகவும் அதன் ஒழுங்குகளைப் பேணுபவர்களாகவும் இறைவன் நம்மை ஆக்குவானாக! இதனால் நாம் இறைவனின் அருட்கொடையை விரைவாக ஈர்ப்பவர்களாக ஆவோமாக. நாம் இவ்வளவு துஆ செய்தும் இறைவன் இதை ஏற்றுக் கொள்ளவில்லையே என்ற எண்ணம் ஒருபோதும் நமது உள்ளத்தில் தோன்றக் கூடாது. அல்லது நமக்கு அந்தக் காட்சிகளைக் காட்டவில்லையே என்று எண்ணக்கூடாது. அல்லாஹ் நமது துஆக்களை ஏற்றுக் கொள்கிறான். நமது சின்னச் சின்ன துஆக்களுக்கும், சின்னச் சின்ன முயற்சிகளுக்கும் தனது சிறப்பான கருணையைக் கொண்டு மிக அதிக பலன் தருகிறான். இதை எண்ணும்போது நமக்கு வியப்பு ஏற்படுகிறது. நான் முன்னதாக குறிப்பிட்டு விட்டேன். பாகிஸ்தானில் எதிரிகளின் திட்டங்களில் நாளுக்கு நாள் முன்னேற்றம் ஏற்படுகிறது. இதை ஒப்பிடும்போது அத்திட்டங்களில் அவர்கள் பெறும் வெற்றி ஒன்றுமே இல்லை. பிறகு பாகிஸ்தானில் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் ஈமானில் முன்னேற்றம் கண்டு வருகிறது. இன்னும் அல்லாஹ்வின் எண்ணற்ற அருள்களைக் கண்டு வருகிறது. உலகில் அல்லாஹ் ஜமாஅத்தை அறிமுகப்படுத்துகிறான். முன்னேற்றத்தைக் காட்டுகின்றான். இது நமது சாதாரண முயற்சி மற்றும் சின்னச்சின்ன துஆக்களின் பலனாகும்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், இறைவன் நமது துஆக்களை ஏற்றுக் கொள்வதில்லை என்ற எண்ணம் கூட யாருக்காவது தோன்றினால் அவர் உடனடியாக பாவமன்னிப்புக் கேட்க வேண்டும். அல்லாஹ் எஜமானன் ஆவான். எஜமானனிடம் வேண்டிக் கொண்டே இருப்பதுதான் நமது கடமையாகும். இவ்வாறு இதற்கும் சில ஒழுங்குமுறைகள் உள்ளன. அதை நாம் பேண வேண்டும். இதை நிறைவேற்றுவது நமது கடமையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆக்களின் ஒழுங்குமுறையை நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். துஆ செய்யும் போது ஒருபோதும் சோர்வடைந்து நம்பிக்கை இழந்து விடக் கூடாது என்று நமக்கு அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் அல்லாஹ்வின் மீது ஒருபோதும் தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. அவன் துஆக்களை கேட்பதில்லை என்று எண்ணக் கூடாது. ஒன்று துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது இயற்கையின் சட்டத்தின்படி அதற்குரிய நேரத்தை அது எடுத்துக் கொள்கிறது. இரண்டாவது

விஷயம் துஆ கேட்கப்படுவதைப் போன்றே அதே வடிவத்தில் அது ஏற்றுக் கொள்ளப்படுவதும் அவசியமில்லை. மாறாக இறைவன் பிற வழிகளிலும் தனது அன்பை வெளிப்படுத்துகின்றான். நான் முன்னதாக குறிப்பிட்டேன். உலகத்தின் முன்னேற்றத்தில் பாகிஸ்தான் செய்து வரும் தியாகம் மற்றும் பாகிஸ்தானின் அஹ்மதிகள் செய்து வரும் தியாகங்களுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. முன்றாவது விஷயம் மனிதன் தனது நிலையையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தூய்மையான முறையில் அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு தனது நிலையை அல்லாஹ்வின் சன்னிதானத்தில் வைத்தாரா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வாறு நாம் ஆய்வு செய்தால் தவறு மனிதனுடையது தான் என்பது தெரிய வரும்.

**பிறகு இன்னொரு இடத்தில் துஆவின் ஒழுங்கை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனிடம் துஆ செய்வதற்கு அதனை மேற்கொள்வதற்கு அவசியமாகும். அறிவுடையவர்கள் அரசனிடம் ஏதாவது வேண்டும் போது எப்போதும் ஒழுங்கைப் பேணுவார்கள். எனவே தான் சூரா ஃபாத்திஹாவில் இறைவன் எவ்வாறு துஆ கேட்பது? என்று கூறுகின்றான். அதில் அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் – அகில உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் உரியதாகும். அர்ரஹ்மான் – கேட்காமலேயே வாரி வழங்குபவன் ஆவான். அர்ரஹீம் – உண்மையான உழைப்பிற்கு சிறந்த பிரதிபலன் தருபவன் ஆவான். மாலிக்கி யவ்மித்தீன் – நற்கூலி மற்றும் தண்டனை அளிப்பது அவனது கையில் உள்ளது. அவன் விரும்பினால் வாழ வைப்பான். விரும்பினால் மரணிக்கச் செய்வான். நன்மை, தீமை மற்றும் நற்கூலி, தண்டனை ஆகியவை இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவனது கையில் உள்ளது. தண்டனை மற்றும் நற்கூலி இவ்வுலகிலும் உண்டு. மறுமையிலும் உண்டு. இரண்டும் அவனது கையில் உள்ளது. மனிதன் இந்த அளவுக்கு இறைவனை புகழ வேண்டும் என்று எண்ணும்போது இறைவன் எவ்வளவு பெரியவன்? என்ற எண்ணம் அவனுக்கு தோன்றுகிறது. அவன் ரப் ஆவான். ரஹ்மான் ஆவான். ரஹீம் ஆவான். இந்த துஆவை செய்யும் போது மனிதனுக்கு மறைவானவற்றின் மீது நம்பிக்கை ஏற்படுகிறது. இறைவனை முன்னால் இருந்து பார்ப்பது போன்று உணர்ந்து வேண்டுகிறான். அதாவது அல்லாஹ்வின் இந்த பண்புகளின் மீது மறைவான நம்பிக்கை ஏற்படுகிறது. அதில் எவ்வளவு முன்னேறி விடுகிறான் என்றால் பிறகு இறைவனைப் பார்ப்பது போன்று இறைவன் தன் முன்னால் இருப்பதைப் போன்று உணர்ந்து அவனை அழைக்கின்றான். இய்யாக்க நஃபுது வஇய்யாக நஸ்தயீன் – நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம். இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் – மிகவும் நேராகவும் எவ்வித கோணலும் இல்லாத வழியில் நடத்துவாயாக. குருடர்களின் வழி என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் கடின உழைப்பிற்குப் பிறகு களைப்படைந்து விடுகிறார்கள். இன்னொரு வழியும் உள்ளது. அதில் உழைப்பதால் சிறந்த நற்கூலி கிடைக்கிறது.

அதன் பிறகு ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம் – நீர் யார் மீது அருள் புரிந்தாயோ அந்த வழியில் நடத்துவாயாக. அந்த வழியே நேரானதாகும். அதில் வழி நடப்பதால் அருட்கொடை கிடைக்கிறது.

பிறகு கைரில் மக்லூபி அலைஹிம் – உனது கோபத்திற்கு ஆளானவர்களின் வழியில் வேண்டாம். வளழ்ழாள்ளீன் – உன்னிடமிருந்து வெகு தூரம் சென்றவர்களின் வழியும் எங்களுக்கு வேண்டாம்.

எனவே துஆ செய்வதற்கான ஒழுங்குமுறைகளையும் நாம் தெரிந்திருக்க வேண்டும். அல்லாஹ்வின் அடிப்படைப் பண்புகள் ரப், ரஹ்மான், ரஹீம் மற்றும் மாலிக்கி யவ்மித்தீன் என்பதாகும். இதன் மீது முழுமையான ஈமான் இருக்க வேண்டும். அவ்வாறு முழுமையான ஈமான் இருந்தால் மட்டுமே இபாதத் மற்றும் துஆவின் பக்கம் கவனம் ஏற்படும். மனிதன் பணிவுடன் அவனிடம் உதவியை நாடுகிறான். அந்த அருட்கொடைகளைப் பெறுவதற்காக இறைவனை அழைக்கிறான். இந்த அருட்கொடைகளை இறைவன் தனது தூய நல்லடியார்களுக்கு வழங்குகின்றான். எனது எந்தவொரு செயலும் இறைவனின் கோபத்தைத் தூண்டுவதாக அமைந்து விடக் கூடாதே என்ற அச்சம் இருக்க வேண்டும். எப்போதும் இறையச்சம் உள்ளத்தில்

நிலைத்திருக்க வேண்டும். எப்போதும் ஒரு பணிவான நல்லடியார் நான். ஒருபோதும் எனது இறைவனை விட்டு விலகி விடக்கூடாதே என்று எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். நான் எனது இறைவனை மறக்கக் கூடியவனாக ஆகிவிடும் எந்தவொரு தருணமும் எனக்கு நேர்ந்து விடக்கூடாது.

எனவே இந்த நிலை ஏற்பட்டு விட்டால் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அருட்கொடைகள் பக்கத்தில் நெருக்கமாக ஆக்கப்படுகின்றன. எதிரியின் அழிவு தென்படுகிறது. எனவே நான் ஏற்கனவே கூறியது போன்று வாருங்கள் இப்போது முன்பை விட அதிகமாக உங்கள் ஈமானை உறுதிப்படுத்துங்கள். தூய்மையான மனதுடன் அவன் முன்னால் குனியுங்கள். நமது எதிரி எல்லையை மீறினால் நாமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய இந்த கவிதை வரியை உண்மைப்படுத்துபவர்களாகத் திகழ வேண்டும்.

நிச்சயமாக நாம் நமது இறைவனின் உதவியில் மூழ்கியவாறு அவனிடம் உதவியை வேண்டினால் அவன் ஓடி வருவான். நமது எதிரிகளை அழித்து விடுவான்.

ஒருவர் உண்மையான இறை நல்லடியாராக இருந்தால், இரவுப் பொழுதில் செய்கின்ற துஆ என்ற அம்பின் மூலம் அர்ஷின் கால்களைக் கூட உலுக்கி விட இயலும். துஆக்களின் மூலம் எதிரிகளை மண்டியிட வைக்க முடியுமென்றால் அரசவை உறுப்பினர்கள் கூட நாங்கள் இந்த அம்புகளை எதிர்கொள்ள முடியாது என்று கூற வைக்க முடியுமென்றால் நாம் நிச்சயமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்பவர்களாவோம். நான் உம்முடனும் உமது நேசர்களுடனும் இருக்கின்றேன் என்ற நற்செய்தியை இறைவன் அவர்களுக்கு வழங்கினான். நாம் துஆ செய்தால் இரவுப் பொழுதின் அம்புகளைக் கொண்டு எதிரியை எதிர்கொண்டால் இதில் நிச்சயமாக நமக்கு வெற்றி உள்ளது. ஆனால் அந்த அரசவை உறுப்பினர்களிடம் ஏதோ ஒரு நன்மை இருந்தது. அதன் காரணமாக அந்த அரசவையினர் அந்த சான்றோரை அச்சத்தின் காரணமாக இரவுப் பொழுதின் அம்புகளை எய்து தொல்லை கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். அவர்கள் தமது இடத்தை மாற்றி விட்டார்கள். பாடல்களை பாடுவதை விட்டு விட்டனர். ஆனால் இன்று தம்மை மவ்லவிகள் என்றும் ஆலிம்கள் என்றும் கூறுபவர்கள் ரஸுலின் பெயரின் ரஹ்மத்துல் லில் ஆலமீனாக இருக்கும் ரஸுலின் பெயரைக் கொண்டு அநியாயம் இழைக்கின்றனர். இவர்களிடம் எந்தவொரு நன்மைக்கான அடையாளமும் இல்லை. அவர்களுக்கு இறைவனின் மீதும் நம்பிக்கை இல்லை. ரஸுலின் மீதும் நம்பிக்கை இல்லை. இவர்களிடம் எந்த நன்மையையும் எதிர்பார்க்கவே முடியாது. இவர்களின் முடிவு அழிவுதான் என்பது நன்றாகத் தெரிகிறது. இது நமது இரவுப் பொழுதின் அம்புகளால் மட்டுமே முடியும். இறைவன் ஆறுதல் அளித்த மஸீஹின் அடியார்களாக நாம் இருக்கிறோம். நான் உம்முடனும் உமது நேசர்களுடனும் இருக்கிறேன் என்று இறைவன் கூறினான். நாம் நமது அன்பிற்குரிய இறைவனை தூய மனதோடு அழைத்தால் நமது இரவுப் பொழுதின் அம்புகளை எதிரிகளின் மீது எய்தால் நிச்சயமாக இறைவன் தனது உண்மையின் சிறப்பான அடையாளத்தைக் காட்டுவான். எனவே துஆ ஒரு சிறந்த ஆயுதமாகும். இதை முழுமையான நம்பிக்கையுடன் ஒருவர் பயன்படுத்தினால் யாரும் இதை எதிர்கொள்ள முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்டவர்கள் ஆவார்கள். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் அடிமைத்தனத்தின் மூலம் இக்காலத்தில் மனிதனை இறைவனுடன் சேர்ப்பதற்கு தோன்றினார்கள் என்பதிலும் எந்த சந்தேகமும் இல்லை. இறைவன் அவர்களிடம் செய்த வாக்குறுதிகள் யாவும் கண்டிப்பாக நிறைவேறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஏனென்றால் நமக்கு இதன் மீது எள்ளளவும் சந்தேகம் இல்லை. இறைவன் தான் செய்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையோ என்ற சந்தேகம் நமக்கில்லை. அவன் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றான். அவன் உண்மையான வாக்குறுதிகளை வழங்குபவன் ஆவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் செய்த நாளிலிருந்து இன்று வரை எதிர்ப்பின் புயல் வீசிக் கொண்டு தான் இருக்கிறது. ஒரு காலத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபாவின் காலத்தில் எதிரிகள், ஆரியர்கள் காதியானை முற்றிலுமாக அழிப்பதற்கு முயற்சி செய்தார்கள். ஒருவர் பதவி ஆசையின் காரணமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கையில் துப்பாக்கியை கொடுக்க முயற்சி செய்தார். இன்னொருவர் பதவியின் மோகத்தால் அஹ்மதிய்யத்தை ஒரு புற்று நோய் என்று கூறி அதை வேருடன் அறுத்தெரிய சபதம் எடுத்தார். ஆனால் விளைவு என்ன ஆனது? இன்று அஹ்மதிய்யத் உலகின் 200 நாடுகளில் பரவி விட்டது. எனவே இந்த இயக்கம் இறைவனுக்கு மிகவும் பிடித்த இயக்கமாகும். அவன் தமது அன்பிற்குரியவரை இஸ்லாத்தை வளர்ப்பதற்காக இக்காலத்தில் அனுப்பி இந்த இயக்கத்தை தொடங்கியுள்ளான். ஒவ்வொரு நொடியும் நாம் இறைவனின் உதவிகளைக் காணும் காட்சியைப் பார்க்கிறோம். நமக்கு கவலை ஒன்று இருக்கின்றதென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனின் உண்மையான நபி ஆவார்கள் என்ற விஷயத்தில் கவலை இல்லை. அல்லது இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்ற கவலை நமக்கில்லை. மாறாக நாம் நமது கடமையை சிறந்த முறையில் செய்பவர்களாக இருக்கின்றோமா? இல்லையா? என்பதை தான் நமக்கு கவலை இருக்க வேண்டும். நாம் துஆவின் பக்கம் கவனம் செலுத்துகிறோமா? இல்லையா? நாம் இறைவனின் உரிமைகளை செலுத்துகிறோமா? இல்லையா? இறைவனின் சந்நிதானத்தில் பணிவுடன் குனிகிறோமா? இல்லையா? என்பதில் கவலை அடைய வேண்டும். எனவே நாம் நமது கடமைகளை நிறைவேற்ற வேண்டியது நமது பொறுப்பாகும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி அநியாயமான வார்த்தைகளைக் கேட்டும், படித்தும் உள்ளத்தில் வேதனையை உணர்பவர்களாகவும் உள்ளத்தின் நிம்மதி இழப்பை வெளிப்புறமாக காட்டுபவர்களாக மட்டும் இல்லாமல் நாம் நமது இரவுப் பொழுதின் துஆக்களின் மூலம் அல்லாஹ்வின் நியதியை விரைவாக நமக்கு சாதகமாக நிறைவேற்றுவதற்காக முயற்சி செய்பவர்களாக இருக்க வேண்டும்.

தனிப்பட்ட முறையிலும் ஒட்டுமொத்த கூட்டாளி நிலையிலும் இறைவனின் கருணையையும் அருளையும் ஈர்க்கக்கூடிய துஆக்களை செய்வதற்கான நல்வாய்ப்பை நல்குவானாக. நாம் இறைவனின் அர்ஷை உலுக்கி விடும் துஆக்களை செய்பவர்களாக இருக்க வேண்டும். இதனால் இறைவன் தனது வானவர்களின் படைகளுக்கு செல்லுங்கள். அங்கு சென்று அநீதியிழைக்கப்பட்ட இந்த மக்களுக்கு உதவுங்கள் என்று கட்டளை இடுவானாக. இந்த மக்கள், என் இறைவா நான் தோற்கடிக்கப்பட்டுள்ளேன். எதிரிகளை எனக்காக பழிவாங்குவாயாக. இவர்களை சின்னா பின்னமாக்குவாயாக என்று கூறி என்னை அழைக்கிறார்கள் என்று இறைவன் கூறுவான். இறைவன் வானவர்களிடம் நீங்கள் சென்று அநீதிக்கு ஆளாகியுள்ள இந்த ஆதரவற்ற மக்களுக்கு உதவி செய்யுங்கள். இவர்கள் பெரும்பான்மையைக் கொண்டவர்கள் என்று கர்வத்தால் இவர்களை அநீதிக்கு இலக்காக ஆக்குகின்றனர். ஆட்சியாளர்கள் கடுமையான சட்டதிட்டங்களின் கீழ் இவர்களை ஒவ்வொரு உரிமையிலிருந்தும் விலக்கி வைக்க முயற்சி செய்கின்றனர். மார்க்கத்தின் பெயர் தாங்கிய குத்தகைக் காரர்கள் இஸ்லாத்தின் பெயரை பயன்படுத்தி உலகை விட்டு அழிக்க வேண்டும் என்று சூளுரைக்கின்றனர். இவர்கள் செய்த ஒரே குற்றம், இவர்கள் என்னால் அனுப்பப்பட்டவரை ஏற்றுக் கொண்டுள்ளனர். நாங்கள் அழைப்பவர் ஒருவரின் அழைப்பைக் கேட்டோம். நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம் என்று கூறுகின்றனர். எனவே எனது வானவர்களே நீங்கள் இவர்களுக்கு உதவி செய்து இம்மக்கள் எனது குரலுக்கு செவிசாய்ப்பவர்களாவர். எனவே நான் இவர்களது நண்பன் ஆவேன். நான் இவர்களுக்கு உறுதுணையாக இருப்பவனும் உதவியாளனும் ஆவேன் என்று உலகிற்கு கற்பித்து விடுங்கள். சிறந்த எஜமானனும் சிறந்த உதவியாளனும் நான் ஆவேன் என்ற எனது அறிவிப்பு இன்றும் உண்மையானது என்று மக்களுக்கு கூறி விடுங்கள் என்று இறைவன் வானவர்களுக்கு கூறுவான்.

எனவே என்னோடு மோதுபவர்கள் கண்டிப்பாக எனது பிடியின் கீழ் வருவர் என்று அல்லாஹ் கூறுகிறான். எனவே இறைவனின் இந்த அன்பின் நடைமுறையைப் பெறுவதற்காக ஒவ்வொரு அஹ்மதியும்

இறைவின் முன் குனிய வேண்டும். துஆ செய்யுங்கள். இறைவனின் அர்ஷிலிருந்து நமது எதிரிகளுக்கு எதிராக நமக்கு உதவி செய்வதற்கான கட்டளை பிறப்பிக்கப்படும் வரை துஆ செய்யுங்கள்.

நாம் பலவீனமானவர்களாவோம். நாம் இந்த எதிரிகள் செய்யும் செயல்களுக்கு பதிலடி கொடுக்க முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர். இதற்கு ஒரு வழிதான் உள்ளது. நீங்கள் உங்களது சஜ்தா செய்யும் இடத்தை நனைத்து விடுங்கள். உங்களது எஜமானன் ஆதரவற்றவர்களுக்கு நண்பன் மற்றும் அநீதிக்கு ஆளானவர்களின் ஆதரவாக இருக்கும் இறைவனுக்கு குரல் கொடுங்கள். நீங்கள் ரஸூல் (ஸல்) அவர்களின் இறைவனுக்கு குரல் கொடுங்கள். அவன் பலவீனமாக இருந்த, நிராயுதபானியாக இருந்த முஸ்லிம்களை அடிமைத்தனத்திலிருந்து வெளியேற்றி எஜமானர்களாக ஆக்கி விட்டான். அவன் எதிரிகள் செய்த ஒவ்வொரு சூழ்ச்சியையும் அவர்கள் மீது திரும்புமாறு செய்து விட்டான். எனவே எங்கள் இறைவனை இன்று நாங்கள் உன்னுடைய கருணை மற்றும் கம்பீரத்தை ஆதரவாகக் காட்டி துஆ செய்கிறோம். உன்னுடைய தூதரை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று வாதம் புரிகின்ற மக்களுக்கு அவர்களது நாட்டிலுள்ள சுயநலவாதிகளின் ஆணவத்திற்கு ஆதரவாக அநீதியிழைக்கப்பட்ட உனது நல்லடியார்களுக்காக இன்று பூமி சுருங்கியுள்ளது. இதை எங்களுக்காக முட்கள் நிறைந்த காடுகளாக ஆக்குவதற்கு எதிராக முயற்சி செய்கின்றனர். நீ உனது சிறப்பிற்குரிய கருணையின் மூலம் எங்களுக்கு இதை சொர்க்க பூமியாக ஆக்கி விடுவாயாக. எங்களுக்காக இதை பூவாகாவும், பூஞ்சோலையாகவும் ஆக்குவாயாக. எங்களை இறையச்சத்தில் முன்னேறுபவர்களாக ஆக்குவாயாக. எங்களுக்கு என்றும் முடிவுறாத உனது சந்திப்பை நல்குவாயாக. எங்களுடைய துஆக்களை எப்போதும் ஏற்றுக் கொள்வாயாக. முஹம்மதிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுள் ஒரு பெரும் எண்ணிக்கையைக் கொண்ட மக்களை பெயர் தாங்கிய ஆலிம்களின் சங்கிலிப் பிணைப்பிலிருந்து வெளியேற்றி உனது விருப்பத்திற்குரியவரின் உண்மை நேசருடைய ஜமாஅத்தில் இணைப்பதற்கான நல்வாய்ப்பை எங்களுக்கு வழங்குவாயாக. இதனால் முஸ்லிம் சமுதாயம் தலைசிறந்த சமுதாயம் என்ற உரிமையை செலுத்துகின்ற சமுதாயமாகத் திகழ வேண்டும். மேலும் உலகத்தை அநீதியிலிருந்து தூய்மையாக்க வேண்டும். கருணை காட்டுபவர்கள் எல்லாரையும் விட அதிக கருணை காட்டுகின்ற எங்கள் இறைவா! நீ எங்கள் மீது கருணை காட்டியவாறு எங்களுக்கு இதை செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இப்போது ஒரு கவலை தரும் செய்தியைக் கூறுகிறேன். கொடுமையிழைப்பவரின் கொடுமைக்கு பாகிஸ்தானில் இன்னும் ஓர் அஹ்மதி இலக்காக்கியுள்ளார். இவர் கொஞ்ச நாட்களுக்கு முன் ஷஹீதாக்கப்பட்டுள்ளார். இவர் மாஸ்டர் ரானா திலாவர் ஹுஸைன் சாஹிப் ஷஹீத் ஆவார். இவர் முஹம்மது ஷரீஃப் சாஹிப் அவர்களின் மகன் ஆவார். இவர் ஷேகுபூரா என்ற ஊரைச் சேர்ந்தவராவார். திலாவர் சாஹிப் 25 மே 1969 –ல் ஷேகுபூராவில் பிறந்தார். தொடக்கக் கல்வியை இவர் அங்கேயே கற்றார். பின்னர் பி.ஏ. பயின்றார். Teacher Training Course –ம் முடித்தார். 2011 அக்டோபர் 1 ஆம் தேதி அன்று மதியம் 12.30 மணி அளவில் இவர் பள்ளியில் பாடம் நடத்திக் கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத சிலர் பள்ளிக்கூடத்திற்கு வந்து இவருடைய வகுப்பறைக்குள் நுழைந்தனர். இவரை துப்பாக்கியால் சுட்டனர். ஒரு தோட்டா இவரது தொண்டையிலும் இன்னொன்று வயிற்றிலும் பட்டது. அங்கேயே இவரை ஷஹீதாக்கி விட்டனர். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

பள்ளிக்கூடத்தில் இவர் காயமுற்றிருந்தார். அவரது நிலை மிகவும் மோசமாக இருந்தது. மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இவர் ஷஹீதாகி விட்டார். இவர் புதிய அஹ்மதி ஆவார். தொடக்கத்திலிருந்தே இவரது இயல்பில் மார்க்கத்திற்கான பணிகளைச் செய்வதில் ஆர்வமும் சத்தியத்தைத் தேடுவதில் ஆர்வம் கொண்டவராகவும் இருந்தார். பல ஆலிம்களை சந்தித்து வந்தார். பல்வேறு நூல்களைப் படிப்பதில் ஈடுபட்டு வந்தார். இஸ்லாமிய பிரிவுகளைப் பற்றிய ஆய்வு இவரது வழக்கமாக இருந்தது. இவருடைய இயல்பு நேர்மையாக இருந்ததாலும் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்ததாலும் இன்றைய நாட்களில்

உலமாக்கள் பரப்பி வருகின்ற பித்அத்துகள் அனைத்யையும் முன்னதாகவே அவர் கைவிட்டிருந்தார். இஸ்லாமிய சடங்குகள் என்ற வடிவில் இன்று மார்க்கத்தில் புகுந்துவிட்ட பித்அத்துகளை இவர் வெறுத்து வந்தார். சடங்கு, தாயத்து ஓதுவது, கத்தம் பாத்திஹா ஓதுதல் போன்றவற்றை எதிர்த்து வந்தார். மேலும் தமது நண்பர்களிடமும் உறவினர்களிடமும் இவை வீணானவையாகும். எனவே இதை கைவிட்டு விடுங்கள் என்று ஜமாஅத்தில் இணைவதற்கு முன்னதாகவே கூறி வந்தார். அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி இவருக்கு சில நண்பர்கள் மூலமாக கிடைத்தது. பிறகு ஆய்வு செய்யும் நோக்கத்துடன் பலமுறை தமது உறவினர்களுடன் ரப்வாவிற்கும் வந்துள்ளார்கள். ஜமாஅத்தின் பல்வேறு நூல்கள் மற்றும் பத்திரிகைகளை படிப்பதைத் தவிர M.T.A. வில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளையும் பார்த்து வந்தார்கள். அப்போது அங்கிருந்த ஓர் பிரபலமான அஹ்மதியுடன் அறிமுகம் ஏற்பட்டது. அவர்களின் தொடர்பில் இருந்து வந்தார்கள். பிறகு கொஞ்ச காலம் கழித்து பைஅத் செய்ய தீர்மானித்தார். இன்னும் கொஞ்ச காலம் நன்றாக ஆய்வு செய்து கொள்ளுங்கள். நீங்கள் நன்றாக திருப்தி பெற்ற பின்னர் உங்களிடம் பைஅத் வாங்குகிறோம் என்று கூறப்பட்டது. அதற்கு அவர் இல்லை. ஆய்வுகள் போதும். எந்த நேரத்தில் எனக்கு மரணம் வரும் என்று யாருக்கு தெரியும்? நான் அறியாமையில் இருக்கின்ற நிலையில் மரணம் அடைய விரும்பவில்லை என்று கூறினார். 2010 செப்டம்பர் 29 -ல் இவர் தனது மனைவி மக்களுடன் பைஅத் செய்தார். பைஅத் செய்த பின் அசாத்தியமான முறையில் இவரிடம் ஆன்மீக மாறுதல்கள் ஏற்பட்டன. தொழுகையில் அதிக ஈடுபாடு ஏற்பட்டது மட்டுமின்றி திருக்குர்ஆனை தொடர்ந்து ஓதும் பழக்கம் வந்தது. தமது குழந்தைகளுக்கும் இதை வலியுறுத்தி வந்தார்கள். ஜமாஅத்தாக தொழும் பழக்கத்தை ஏற்படுத்தி வந்தார்கள். கிலாஃபத்துடனும் இவருக்கு நேசம் இருந்தது. பைஅத் செய்தவுடன் வீட்டில் M.T.A.வைப்பதற்கு ஏற்பாடு செய்தார். அதை தாம் பார்ப்பது மட்டுமின்றி குழந்தைகளையும் உடன் அழைத்து பார்க்க வைப்பார். M.T.A.-ன் எல்லா நிகழ்ச்சிகளையும் பார்த்து வந்தார். இவருக்கு தப்லீகில் அதிக ஈடுபாடு இருந்தது. அசாத்தியமான உணர்வுகள் கொண்டிருந்தார். இவர் தமது உறவினர்கள் மற்றும் உடன் வேலை பார்த்து வரும் ஆசிரியர்களுக்கு விருந்து கொடுத்து வந்ததுடன் உள்ளூர் முரப்பி சாஹிபை தொடர்ந்து இவர்களுக்கு அறிமுகப்படுத்தி வந்தார். இது தவிர ஜமாஅத்தின் பிற CD -க்கள் மற்றும் M.T.A. மற்றும் ஜமாஅத்தின் நூல்கள் மற்றும் பத்திரிகைகளை அவர்களுக்கு கொடுத்து வந்தார். மேலும் பல நூல்களை அவர் சொந்தமாகவும் படித்து வந்தார். இவர் தப்லீக் செய்வதில் மிகவும் தைரியம் காட்டி வந்ததாக ஒரு முரப்பி சாஹிப் எனக்கு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அதே போன்று கிலாஃபத்துடன் விசுவாசம் கொண்டிருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பெயரை குறிப்பிட்டால் மிகவும் கண்ணியமும் மரியாதையும் இவருடைய கண்களில் தென்படும். முரப்பிகள் மற்றும் முஅல்லிம்கள் மற்றும் ஜமாஅத்தின் ஊழியர்களுடன் மிகவும் தூய்மையான மற்றும் விசுவாசம் மிகுந்த தொடர்பு வைத்திருந்தார்கள். விருந்தோம்பல் என்ற பண்பு இவர்களிடம் மிகவும் அதிகமாக இருந்தது. ஜுமுஆ தொழுவதற்காக முறைப்படி செல்வார்கள். குழந்தைகளையும் உடன் அழைத்துச் செல்வார்கள். தமது குழந்தைகளுக்கு தர்பிய்யத் கொடுப்பதற்காக மிகவும் கவலையுடையவராக இருந்தார். இவரது சிறிய மகன் முரப்பியாக வேண்டும் என்று இவர் விரும்பினார். எல்லா நேரமும் எல்லா தியாகமும் செய்ய தயாராக இருந்தார். ஜமாஅத்தின் சந்தாக்களில் பைஅத் செய்தவுடன் முறைப்படி செலுத்த ஆரம்பித்து விட்டார். பைஅத்திற்குப் பிறகு மிகவும் அதிகமான எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியது ஏற்பட்டது. இவரது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் இவரை புறக்கணிப்பு செய்து விட்டார்கள். ஆனால் ஊர் நீக்கம் செய்த பிறகும் அவர் ஈமானில் இன்னும் உறுதியை வெளிப்படுத்திக் கொண்டே சென்றார். இறுதியில் சில மவ்லவிகளுடன் இவரது வீட்டுக்காரர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டிருந்தனர். ஆனால் மவ்லவிகளிடம் எந்த ஆதாரமும் இல்லை. அவர்கள் தோல்வி அடைந்தனர்.

இவருடைய வீட்டிற்கு எதிர்புறம் மவ்லவிகள் ஒரு மாநாடு நடத்தினர். இவர் தனியாக அந்த மாநாட்டிற்கு சென்றார். மவ்லவிகளால் ஒன்றும் செய்ய முடியாமல் போனதால் குஃப்ர் ஃபத்வா கொடுத்து இவர் கொலை செய்யப்பட வேண்டும் என்றும் ஃபத்வா கொடுத்தனர். ஆனால் இவர் எந்த அச்சமும் கொள்ளாமல் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். மவ்லவிகளுடன் ஆதாரங்களைக் கொண்டு பேசுவதற்கு முயற்சி செய்தார்.

ஆனால் மவ்லவிகளிடம் எந்த ஆதாரமும் இல்லாததால் இறுதியில் ஏசிப்பேசி விட்டு அங்கிருந்து சென்று விட்டனர். இவருக்கு முதலில் ஒரு திருமணம் நடந்தது. அந்த மனைவி இறந்து விட்டார். பிறகு 1999-ல் இவருடைய மனைவியின் இரண்டாவது சகோதரியுடன் திருமணம் நடந்தது. இவர் மூலம் இவருக்கு 2 மகன்களும் 2 மகள்களும் பிறந்தனர். இவர்களது வயது 17, 15, 9, 5 முறையே ஆகிறது. அல்லாஹ் மர்ஹூமின் பதவிகளை உயர்த்துவானாக. இவர்களது மனைவி மக்களை நிலைத்திருக்கச் செய்வானாக. ஈமானில் முன்னேற்றத்தை வழங்குவானாக. இவர்களுக்கு உதவியாளனாக இருப்பானாக. பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களது ஜனாஸாவை தொழ வைப்பேன் இன்ஷா அல்லாஹ்.

இரண்டாவது ஜனாஸா காயிப் ஒன்று உள்ளது. ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் மிகவும் பழைய ஊழியர் ஃபஸ்ல் தீன் சாஹிபின் மகன் அப்துல் ஜப்பார் சாஹிப். அக்டோபர் 4 ஆம் தேதி காலையில் இவர் வஃபாத் ஆனார். மிக நீண்ட நாட்களாக இவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். இருதய கோளாறு ஏற்பட்டது. இவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 69 வயதில் இவர் மரணம் எய்தியிருக்கிறார். இவ்வளவு துன்பம் இருந்தும் இவர் தமது கடமையை சிறந்த முறையில் நிறைவேற்றி வந்தார். ஏறக்குறைய 45 வருடங்கள் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுக்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் இவருக்கு கிடைத்திருந்தது. மிகவும் நல்லவர் ஆவார். நானும் இவரைப் பார்த்திருக்கின்னேன். மருத்துவமனையிலேயே மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்பவர் இவர் ஒருவரேயாவார். நோயாளிகள் இவரை விரும்பினர். அல்லாஹ் இவர்களது பதவிகளை உயர்த்துவானாக. இவர்கள் விட்டுச் சென்றுள்ளவர்களுக்கு பொறுமையையும் மன தைரியத்தையும் வழங்குவானாக.

மூன்றாவது ஜனாஸா மவ்லானா முஹம்மது ஸஃபர் சாஹிபின் மகன் நாஸிர் அஹ்மத் ஸஃபர் சாஹிப் அவர்களின் ஜனாஸா ஆகும். இவர்கள் அரசாங்க ஊழியராவார். ஆனால் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு பல வாய்ப்புகள் கிடைத்தன. பணி நிறைவடைந்த பின்பு அவர் நிரந்தரமாக ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்காக தம்மை அர்ப்பணித்திருந்தார்கள். இவருடைய இலாக்காவைச் சேர்ந்த பொதுமக்களுடன் நல்ல தொடர்பு வைத்திருந்தார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்), ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) மற்றும் நானும் இவர்களை பல பணிகளுக்காக அனுப்பி வந்தேன். இவருக்கு மக்களுடன் நல்ல இணக்கம் இருந்தது. மிகவும் நல்ல மனிதர். இவருடைய பகுதியில் இவர் ஒரு நல்ல சமூக சேவகர் ஆவார். அல்லாஹ் இவரது பதவியையும் உயர்த்துவானாக. இவருடைய உறவினர்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் தருவானாக. இந்த எல்லா ஜானாஸா காயிப் தொழுகையும் இன்ஷா அல்லாஹ் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு தொழப்படும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT HAMBURG, GERMANY**
**ON 07.10.2011**

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456